1990 ஏப்ரல் 20] [திரு. எஸ். டி. உகம்சந்த்]

அப்படிப்பட்ட நகரங்களுக்கு உதவி வழங்குவதற்காக விசேஷமான முறையிலே ஏதாவது திட்டத்தை அரசு உருவாக்கியிருக்கிறதா? அதேபோன்று செஞ்சி வரையிலே நம்முடைய திருக்கோவில் அருகாமையில் இருக்கிற ஆற்றிலிருந்து குடிதண்ணீர் கொண்டு போகும் திட்டத்தை உருவாக்கியிருக்கிறார்கள். அதை விஸ்தரித்து திண்டிவனம் நகரத்திற்கும் நல்ல முறையிலே குடிதண்ணீர் வழங்குவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. நாஞ்சில் இ. மனோகரன் : நிச்சயம் நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. மு. சின்னக்குழந்தை : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவண்ணாமலை சம்புவராயர் மாவட்டத்தில் கடுமையான வறட்சி நிலவிக்கொண்டிருக்கிறது என்பதை மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் அறிவார்கள். அதே நேரத்தில் ஆரணி தாலுக்காவிலும் கடுமையான வறட்சி நிலவுவதோடு, ஆரணி நகராட்சியில் குடிநீர் சப்ளை 15 நாட்களுக்கு ஒரு முறை கொடுக்க வேண்டிய துர்ப்பாக்கியமான ஒரு சூழ்நிலை இருக்கிறது. ஆகவே மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள் லாரிகள் மூலம் தண்ணீர் சப்ளை செய்வதற்கும் ஜெனரேட்டர் வாங்குவதற்கும் நகராட்சிக்குத் தேவையான நிதியை அளிப்பாரா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. நாஞ்சில் இ. மனோகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சின்னக் குழந்தைக்குப் பால் வார்க்கின்ற முயற்சியில் இந்த அரசு ஈடுபடும். (சிரிப்பு).

(ஆ) கன்னியாகுமரி மாவட்டம் குறும்பனையில் குடிநீர்ப் பஞ்சத்தால் மக்களிடையே ஏற்பட்டுள்ள பதட்டம் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருவாளர்கள் பொன். விஜயராகவன், ஆ. பாலையா ஆகியோர் ஒரே பொருள் குறித்துக் கவன ஈர்ப்புக் கொடுத்துள்ளனர். அவர்களில் ஒருவர் அதை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். திரு. பொன். விஜயராகவன்.

திரு. பொன். விஜயராகவன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''கன்னியாகுமரி மாவட்டம் குறும்பனை கிராமத்தில் குடிநீர்த் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்:

அறிக்கை.

கன்னியாகுமரி மாவட்டம், குறும்பனை குக்கிராமத்தில் குடிநீர்ப் பற்றாக்குறை இருப்பதைக் கவனத்தில் கொண்டு இதன் குடிநீர் பிரச்சினையைத் தீர்க்க குழித்துறையார் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தில் பயனடையும் கிராமமாக சேர்க்கப்பட்டுள்ளது. இக்கூட்டுக் குடிநீர்த் திட்டமானது முழுமையாக செப்டம்பர் 1990க்குள் முடிக்கப்பட்டுவிடும். அது முதல் இக்கூட்டுக் குடிநீர்த் திட்டத்தில் பயனடையும் குறும்பனை குக்கிராமம் உட்பட எல்லா கிராமங்களிலும் குடிநீர் விநியோகிக்கப்படும். இந்த ஏற்பாடு தவிர வேறு எந்த மாற்று ஏற்பாடுகளும் செய்ய குடிநீர் பெற தகுந்த நீர் ஆதாரங்கள் அருகில் இல்லை.

திரு. பொன். விஜயராகவன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தக் கிராமம் குழித்துறையார் கூட்டு குடிநீர்த் திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளதாகவும், அந்தத் திட்டம் செப்டம்பர் 1990க்குள் முடிவு அடைந்து விடும் என்பதைப் பற்றியும் இங்கே தெரிவித்திருக்கிறார்கள். அது ஒரு நிரந்தரத் தீர்வு. ஆனால் இப்போது ஏற்பட்டிருக்கக்கூடிய கோடையில் அவர்கள் குடிநீர் இல்லாமல், அந்தக் கடற்கரை கிராமப் பக்கத்திலே எங்கேயும் குடிநீர் இல்லாமல் மிகவும் மக்கள் சிரமப் பட்டுக்கொண்டிருக்கிறார்கள். அதனால் அவர்களுக்கு தற்காலிகமாக இந்தக் கோடையின் வெம்மையை நீக்குகின்ற வகையில் அவர்களுக்குக் குடிதண்ணீர் வழங்குகிற வகையில் தற்காலிக ஏற்பாடாக லாரி மூலமாகவோ வேறு ஏதாவது ஏற்பாடுகள் மூலமாகவோ குடிநீர் வழங்குவதற்கு அரசு ஏற்பாடு செய்யுமா என்று நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வறட்சி பகுதியில் குடிநீர் வழங்குவது பற்றி மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள் முன்பே பதில் அளித்திருக்கிறார்கள். ஆகவே அதுபோன்ற நடவடிக்கைகளை எடுக்கின்றபோது, இந்தப் பகுதியும் கருத்தில் கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஆ. பாலையா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குறும்பனை கிராமம் சுமார் பத்தாயிரம் மக்கள் தொகை கொண்டது. ஒரு பகுதி குளச்சல் சட்டமன்ற தொகுதியைச் சேர்ந்த குறுந்தங்கோடு ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்தது. இன்னொரு பகுதி கிள்ளியூர் பகுதியைச் சேர்ந்த கிள்ளியூர் பஞ்சாயத்தைச் சேர்ந்தது. அமைச்சர் அவர்கள்

1990 ஏப்ரல் 20] [திரு. ஆ. பாலையா]

தங்களுடைய பதிலிலே கூறுகிறபோது குழித்துறையார் கூட்டுக் குடிநீர் திட்டத்தில் அந்தக் கிராமப் பகுதி சேர்ந்திருக்கிற காரணத்தால் அங்கு மிக விரைவில் குடிநீர் வழங்கப்படும் என்ற விவரத்தைத் தெரிவித்திருக்கிறார்கள். ஆனால் அந்தப் பகுதியில் இதுவரையிலும் குழித்துறையார் குடிநீர் திட்டத்தினுடைய பணிகள் தொடங்கப்படவே இல்லை என்பதை அமைச்சர் அவர்கள் அறிவார்களா ? மேலும் அந்தப் பகுதியிலே இப்போது மிகக் கடுமையான குடிநீர் பஞ்சத்தை உடனடியாகத் தீர்த்திட அமைச்சர் என்ன நடவடிக்கை எடுக்க போகிறார் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குடிநீர் வடிகால் வாரியத் துறையிலே நடைபெற்ற கூட்டத்திலும் கலந்து கொண்டிருக்கிறார்கள். இதுபற்றி அங்கேயும் எடுத்து வைத்திருக்கிறார்கள். அந்தப் பணிகள் இப்போது துரிதப்படுத்தப்பட்டு நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. மேலும் அவர்கள் உடனடியாக என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்று கேட்டார். அங்கே எந்தவிதமான நீர் ஆதாரங்களும் இல்லாத காரணத்தினாலே தான் முன்பு பேசிய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டதைப் போல லாரிகளின் மூலம், மற்றவைகளின் மூலம் வறட்சி அதிகமாக இருக்கின்ற காலங்களில் குடிநீர் கொடுப்பதற்கான முயற்சிகளை இந்த அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

10-15 மணி

5. அறிக்கைகள் அளித்தல்.

(அ) பொதுக் கணக்கு குழு.

திரு. சா. பீட்டர் ஆல்போன்ஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, 1989–90-ஆம் ஆண்டிற்கான பொதுக் கணக்குக் குழுவின் நாற்பத்தி இரண்டாவது (ஒன்பதாவது சட்டமன்றப் பேரவை) அறிக்கையை இந்தப் பேரவைக்கு அளிக்கிறேன்.

(ஆ) சட்ட விதிகள் ஆய்வுக்குழு.

திரு. வீ. பெ. துரைசாமி (மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்) : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1989–90-ஆம் ஆண்டிற்கான சட்ட விதிகள் ஆய்வுக் குழுவின் நான்காவது (ஒன்பதாவது சட்டமன்றப் பேரவை) அறிக்கையை இந்த பேரவைக்கு அளிக்கிறேன்.